உ

சிவமயம்

# நினைவேந்தும் மலர்த்தூவல்



அமரர்

## செகராஜசிங்கம் இராசநாயகம்

**மண்ணிலே** 03.06.1952

**விண்ணிலே** 19.01.2016

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எனது அன்புத் தெய்வத்தின் திருப்பாதங்களுக்கு

இந் நூல் சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய் அன்புடனும், பண்புடனும்

என்னைப் பேணிக் காத்து இன்முகத்தினனாய்

வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும்

தெய்வமாகி விட்ட என் அன்புத் துணைவரின்

திருப்பாதங்களுக்கு இம் மலரினைக்

காணிக்கையாக்குகின்றேன்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

*மனைவி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மலர்வு

03.06.1952



உதிர்வு

19.01.2016

எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

# செகராஜசிங்கம் இராசநாயகம்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

*மன்மத வருஷம் மறவர் போற்றும் தைத் திங்கள்*
*வளர்பிறை ஏகாதசி மங்கள வாரமதில்*
*நிறை தளரா உன்னத ஆசான் மனிதருள் மாணிக்கம்*
*இராசநாயகம் சீருடல் தான் விட்டு அடைந்தான் சிவன் பதம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

### விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போன்றுகின் றேனே.

### தேவாரம்

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில்
தீவண்ணர் திறம்ஒருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டு உண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில்
அளியற்றார் பிறந்தாவா றேதோவென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும்செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே

### திருவாசகம்

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழறவுழறியுமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் - உனைஎன்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின் கீழ் இருக்க" என்றார்

## திருப்புகழ்

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரு முறுகேளும்
இசைந்தவூரும் பெண்டிருமிளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமு நிலையென மகிழாதே
விளங்குதீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்திலேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்குலாவுங் குன்றுறை குறமகள் மணவாள
திருந்த வேதந்தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையுமழகிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நில்லா உடம்பை நிலை என்று எண்ணற்க

இருப்பது பொய், போவது மெய்!
இது இயற்கை நியதி...
கருத்தில் இதை ஏற்று உந்தன்
கடமைகளை யாற்று!
செருக்ககற்றி, சினந்த விர்ந்து
சிந்தையிலே அன்பைப்
பெருக்கிடுவாய் வாழ்விலே
பேரின்ப நிலை காண்பாய்!

வருந்துகின்ற துன்பத்தீயில்
வாடிமனம் வெந்து
உருக்குலைந்து போவதும் வீண்,
உறுதி கொண்டு நெஞ்சில்
அருட்கடலாம் ஆண்டவனை
அனுதினமும் நேசி!
திருவடிகள் பற்றி அவன்
திருவருளை யாசி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுயிர்த் தெய்வமே!

அன்பே உருவமாய், என்னுயிருடன் கலந்து, இருபத் தொன்பது வருடங்கள் என்னுடன் என்றுமே பிரியாமல் வாழ்ந்தீர்களே, இன்று என்னை இங்கே தனியாகத் தவிக்கவிட்டு விட்டு எங்கு சென்றீர்கள்? உங்கள் அதிர்ச்சி தரும் திடீர் மறைவை என்னால் இன்றும் நம்பவோ, ஏற்கவோ முடியவில்லை. உன்னை அனுப்பிவிட்டுத் தான் நான் பின்பு போவேன். நான் இல்லா விட்டால் நீ தனியாகக் கஷ்டப் படுவாய் எனவே நீ முதலில் போ. நான் பிறகு வருவேன் என அடிக்கடி கூறுவீர்களே. அந்த வார்த்தையை ஏன் மறந்தீர்கள்? நான் நோயுற்று இருதய சத்திர சிகிச்சை செய்திருந்த காலத்தில் என்னை ஒரு குழந்தையாகப் பார்த்து எனக்குச் செய்த பணிவிடைகளால் களைத்துப் போனீர்களோ? பொங்கல் தினத்தன்று என்னை இருத்திவிட்டு தனியாளாய் அனைத்து வேலைகளையும் செய்து சிறப்பாகப் பொங்கல் பொங்கிப் பூரித்துப் போயிருந்தீர்களே. எத்தனை கனவுகளுடன் தாய்நாடு திரும்பிவந்தோம். நொடிப் பொழு தில் எல்லாம் மண்ணோடு மண்ணாகிவிட்டதே. என் இறுதிக் காலம்வரை எனக்குத் துணையாக இருக்க அந்த ஆண்டவன் அனுமதிக்க மறுத்துவிட்டானே. எத்தனை எத்தனை உறவு கள் சூழ இருந்தாலும் தங்களுக்கு இணையாகுமா? தங்கள் ஆத்மா அந்தப் பரம் பொருள் பாதங்களைச் சேர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. தங்கள் ஆத்மா இறைவன் திருவடி களில் நித்திய இன்பம் பெறப் பிரார்த்திக்கின்றேன்.

**பாசமுள்ள மனைவி**
**ஆச்சி**
**(திருமதி.இராசநாயகம்**
**செல்வேஸ்வரி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரரின் வாழ்க்கைத் தடம்
## பரமன்பதம் நாடி பறந்தனையோ இராசா!

சங்கரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த புகழ் பூத்த "வட்டுக்கோட்டைப் பெரிய கதிரேச உடையார்" என அழைக்கப்படும் கதிரேச உடையார் அவர்களின் வழித் தோன்றலாகிய செ.செகராஜசிங்கம் (பூட்டப்பிள்ளை) அவர் கள் யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த திரு.கார்த்திகேசு செல்லமுத்து தம்பதிகளின் செல்வப்புதல்வி மகேஸ்வரியைக் கரம் பிடித்தார். இனிய இல்லற வாழ்வின் பயனாக இராஜலக்ஷிமி, விஜயலக்ஷமி, பாக்கியலட்சுமி, இராசநாயகம் சுசிலாதேவி, நளாயினி, ஸ்ரீரஞ்சினி ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்றார்கள். ஆறு பெண்பிள்ளை களுக்கு ஒரேயொரு அருமை மகனாக திரு.இராசநாயகம் பிறந்தார். மூவருக்குத் தம்பியாகவும் மூவருக்கு அண்ண னாகவும் திகழ்ந்தார்.

அவர் தனது கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் நிறைவுசெய்தார். அன்னார் தன் இளம் வயதிலேயே யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அன் கம்பனி என்னும் மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிறுவனத்தில் ஒரு பொறுப்பான பதவியில் இருந்து தன் கடமைகளைச் சிறப்பாகச் செய்து வந்தார். பின்பு சவூதி அரேபியா சென்று சிலகாலம் அங்கு தொழில் புரிந்தார். மீண்டும் திருமணம் காரணமாக தன் தாய் நாட்டுக்குத் திரும்பிவந்தார். இவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு.கந்தசாமி ஆசிரியர் (கந்தரட்ணம் மாஸ்டர்) பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புத்திரியாகிய செல்வேஸ்வரியைத் திருமணம் செய்து இல்லறமாம் நல்லறத்தை மகிழ்ச்சியாக நடத்தினார். நாட்டின் போர்ச்சூழல் காரணமாக இந்தியா சென்று தன் மனைவி, மாமன், மாமி, மைத்துனர்களுடன் இருபத்தியொரு வருடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மனம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தார். இவரது மூத்த மைத்துனர் திரு.செல்வேஸ்வரன் அவர்கள் இவருக்கு ஒரு சகோதரன் போல் மிகவும் உதவியாக இருந்தார். அவரது உதவியுடன் ஒரு ஆடைத் தொழிற்சாலையில் பொது முகாமையாளராகப் பணியேற்று மிக நீண்ட காலம் தன் கடமையைச் சிறப்பாக மேற்கொண்டார். இவரது பொறுப் புணர்வும் கடமை களைச் சிறப்பாக மேற்கொள்ளும் பாங்கும் அவரது மேலதிகாரிகளால் பாராட்டப்பட்டன.

தனக்குக் கீழே வேலை செய்யும் ஊழியர்களைக் கண்டிப்புடனும் அதேசமயம் கருணையுடனும் வழி நடத்தி னார். தான் கொண்டுசெல்லும் மதிய உணவுடன் மேலதிக மாகக் கொண்டுசென்று யாராவது ஒரு ஊழியரின் பசி தீர்ப் பது அவரின் வழமையான பணியாகும். அவர்களின் துன்பங் களை அறிந்து யாருக்கும் தெரியாமல் பல உதவிகளைச் செய்வார். அவரது பிரியாவிடை வைபவத்தில் அத்தனை ஊழியர்களும் அவர் காலைத்தொட்டு வணங்கி கண்ணீருடன் விடை கொடுத்தார்கள். சிறு வயதில் இருந்தே தன் பெற் றோர், சகோதரிகள், உறவினர் அனைவருக்கும் தன்னாலான உதவிகளைச் செய்து இறக்கும் வரை இப்பணி சமூ கத்துக்கும் தொடர்ந்தது. அன்பு, இரக்கம், பொறுப்பு, சகிப்புத்தன்மை இவரது குணாதிசயங்கள். வட்டுக் கோட் டைக்கு திரும்பிவந்த சொற்ப காலத்துள் அயலவர்களுடன் அன்பாகப் பழகி அவர்களிடம் தன் தொலைபேசி இலக்கத் தைக் கொடுத்து உதவி தேவைப்படும்போது தன்னை அழையுங்கள் என்று கூறி அவர்கள் உள்ளத்தில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டார். நல்லவர்களின் வாழ்க்கை திடீரென முற்றுப்பெறும் போலும். ஆறு மாதத்துக் குள் தாங்க முடியாத துயரைத் தந்துவிட்டுப் பறந்து சென்று விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரத்தையைச் சேர்ந்த அவரது கொப்பாட்டனார் கதிரேச உடையார் சமுதாயத்துக்குச் செய்த சேவைகள் சொல்லில் அடங்கா. எல்லா உடையார்மார்களிலும் பெரியவரான அவர் யாழ் மாவட்டம் மற்றும் ஏழு தீவுகளாலும் அறியப்பட்டவர். பல்லக்கில் அவர் ஊர்வலமாகச் செல்லும் போது ஆங்காங்கு பிணக்குகளைத் தீர்த்து வைப்பார். வீடு இல்லாதவர்களுக்கு வீடு, நிலம் இல்லாதவர்களுக்கு நிலம், சீதனம் இல்லாதவர்களுக்கு சீதனம் எனப் பல்வேறு சேவைகளைத் தன் ஊருக்கும் சுற்றாடல் கிராமங்களுக்கும் செய்துள்ளார். சமயப் பணியிலும் அவர் சளைத்தவர் அல்லர். வட்டுக்கோட்டை உழுத்தொல்லைப் பதி ஆத்திசூடி சித்தி விநாயகர் ஆலயத்தை ஸ்தாபித்தவர் அவரேயாவார். அவருக்கு வேலைப்பழு அதிகரித்ததால் தனது தம்பியார் முருக உடையாரிடம் பராமரிப்புப் பொறுப்பைக் கொடுத்தார். உண்மையில் அடுத்த ஆலய உரித்தாளர் திரு.இராசநாயகம் அவர்கள் தான். திரு.கதிரேச உடையாரின் ஆண்சந்ததிக்கு இருந்த ஒரே ஒரு ஆண்வாரிசு திரு.இராசநாயகம் மட்டுமே. எங்கள் ஒரே ஒரு குலக் கொழுந்தை இழந்து அவரது குடும்பத்தவர், உற்றார், உறவினர் நண்பர்கள் என எல்லோரும் ஆறாத் துயரில் மூழ்கியுள்ளோம். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

**செல்வி.செந்திற்செல்வம்**
**இரகுநாதன்**
**இளைப்பாறிய அதிபர்**
**(கதிரேச உடையாரின் கொப்பாட்டப் பிள்ளை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமிகு சகோதரனே!

அன்பான தம்பியே, எங்கள் அண்ணாவே ஆறு சகோதரிகளுடன் ஆசைக்கும் பாசத்துக்கும் ஒரே ஒரு தம்பியாக, அண்ணாவாக எங்களுடன் வாழ்ந்த காலங்கள் மறக்க முடியவில்லை. சிறுவயது முதல் பிறரின் நலனுக் காகவே பாடுபட்டாய். குடும்பச் சுமையை இளம் வயதில் ஏற்று நீ எங்களுக்கும், உன் பெற்றோருக்கும் உன் கடமை களை தவறாது செய்தாய். மணம் முடித்து இந்தியா சென்று நீண்டகாலத்தின் பின்பு நீ தாய்நாடு திரும்பியதும் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தோம். ஆனால் விதி தான் உன்னை இங்கு இழுத்து வந்திருந்தது. இறைவன் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் பின்னால் இருக்கும். கடைசி நாட்களில் எங்களுடன் சேர்ந்திருக்க உன்னை இங்கே இழுத்துவந்தாரா? உன் மனத் துன்பங்களை வெளிக்காட் டாமல் எல்லோருக்கும் உன் கடமைகளைச் சிறப்பாகச் செய்து முடித்துவிட்டு அந்தப் பரம்பொருளைத் தேடி ஓடி மறைந்தாயே. கடவுள் படைத்த மலர்களில் மண்ணில் சாய்பவை பல. பரம்பொருளின் பாதம் சேர்பவை சில. நீயும் ஒரு புனிதமான பூவாகி இறைவன் பாதார விந்தங்களில் காணிக்கையாக்கப்பட்டு விட்டாய். உன் ஆத்மா அப்பாதங் களில் சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்புச் சகோதரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR BELOVED BROTHER IN LAW

Our beloved brother-in law Rasanayagam was a gem of a person. He always greeted everybody with a warm smile and a kind word. We don't know anybody who he couldn't get along with him. Having lived with my parents for several years, he became another son to them. He had taken very good care of our parents especially during their last days and we would always be grateful to him for it. He had been the most supportive husband to our sister and he pampered her like a kid till his last days. He had been of great help to me in my business as well. He was very professional and enjoyed his job. He had been like a brother to us, having helped us during the good and the bad time. After relocating to Vaddukottai he hoped to repair and decorate our father's house. On pongal day he and our sister set up a fire and cooked Pongal in the house and he proudly asked her to call me on Skype to witness it as he knew it would make me happy. He was one the most warm, kind hearted, dedicated and genuine person we ever knew. He has been a beloved son-in-law, brother -in-law and uncle to all of us and he is remembered as a gentleman he was.

Selveswaran and his family members.
Ratneswaran, Gnaneswaran,
Yogeswaran, Ketheeswaran.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள மாமா வணக்கம்

2016 ஜனவரி 19ஆம் திகதி எங்கள் வாழ்வில் துயர் நிறைந்த நாள் எமது ஒரேயொரு தாய் மாமாவின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தோம். இதற்கு முதல் நாள் அப்பா, அம்மாவுடன் தொலைபேசியில் கதைக்கும்போது "மாமா, அன்ரி சுகமாக உள்ளனர்" என்றார்களே. அதற்கிடை யில் இப்படியொரு பேரிடியா?

கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கின்றோம். பேராதனையில் எங்கள் வீட்டில் நீங்கள் தங்கியிருந்த காலத் தில் சிறுவர் களாகிய நாங்கள் மாமா, மாமா என உங்களைச் சுற்றிச் சுற்றி வருவோமே! நாங்கள் தரும் சிறு சிறு தொல்லை களையும் பொறுத்துக்கொண்டு எம்முடன் விளையாடுவீர் களே! அப்பாவுக்கு நேரமில்லாத போது, பாடசாலையில் இருந்து எம்மை அழைத்து வருகையில் எங்கள் கைகளைப் பிடித்து கவனமாக அழைத்து வருவீர்களே! பல்கலைக்கழக வளாகத்தில் நடக்கும் நிகழ்வுகளுக்கு மிக உற்சாகமாக எங்களை அழைத்துச் சென்று மகிழ்வீர்களே!. சிறுவயது நினைவுகள் தான். அவை என்றும் பசுமையானவை.

காலம் உருண்டோடுகின்றது. நாட்டுப் பிரச்சினையால் நீங்கள் அன்ரியுடன் சென்னையில், நாங்கள் லண்டனில் நாங்கள் சென்னை வரும்போதெல்லாம் மாமா வீட்டிற்குப் போகிறோம் என்று எங்களுக்கு மகிழ்ச்சி. மருமக்கள் குடும் பத்துடன் வருகிறார்களே என உங்களுக்கும் அன்ரிக்கும் மகிழ்ச்சி. இன்முகத்துடன் அன்பான வரவேற்பு, உபசரிப்பு, அன்ரி தோசை, இட்லி, பூரி, சப்பாத்தி, பரோட்டா, சட்னி, சாம் பார் என வகைவகையாகச் சமைத்துப் பரிமாறி எங்களைத் திக்குமுக்காடச் செய்வார். சிறுவர்களாகிய எமது பிள்ளை களுக்கும் அவர்களுக்கேற்ற வகையில் காரமில்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடமாக சமைத்துப் பரிமாறுவது அவர் வழக்கம். உங்கள் பேரன் ஸ்ரீகாந்தன் உறைப்புச் சாப்பிடப் பழகினது உங்கள் வீட்டில் தான்! சாப்பாடு முடிந்த பின், நீங்கள் வேலையிலிருந்து களைத்து வந்தாலும் எம்மோடிருந்து ஊர்க்கதை, உறவினர் கதை, சென்னைக்கதை, லண்டன் கதை என நேரம் போகும். இப்படி ஒன்றா? இரண்டா? எத்தனை இனிய நினைவுகள்! இவற்றை மறக்கமுடியுமா? நெஞ்சம் வலிக்கிறது.

மாமா, உங்கள் வேலைப்பளுவுக்கு மத்தியிலும், சிரமம் பாராது எம்மைக் கோயில்கள், சுற்றுலாத்தலங்கள் என அழைத்துச் செல்வீர்களே.

உங்கள் மருமகள் ஜயந்தியின் திருமணத்தை நாட்டுப் பிரச்சினையால் இலங்கையில் நடத்தமுடியாத நிலையில் சென்னையில் அதனை நடத்துவதற்குத் தேவையான திருமண ஆயத்தங்களையும், வேலைகளையும் சிறப்பாகச் செய்ததை எம்மால் எப்படி மறக்கமுடியும்? இனி நாம் சென்னை செல்லும் போதெல்லாம் உங்கள் நினைவுகள் எம்மை வாட்டி வதைக்கும்!

இன்னும் பல காலம் நீங்கள் வாழ்ந்திருக்கலாம்! ஏன் இப்படிச் சொல்லிக்கொள்ளாமல் திடீரெனப் போனீர்கள்? நோயால் முதுமையால் இறந்தால் மனம் ஓரளவு தாங்கும். ஆனால் இந்த இறப்பை மனம் ஏற்கவில்லை, துயர் தாங்கவில்லை.

உங்களை என்றென்றும் அன்புடன் நினைக்கும் வகையில் எங்களுடன் பாசமாக நடந்து கொண்டீர்கள். உங்கள் இனிய நினைவுகள் என்றும் எம்மனதில் நிலைத்திருக்கும்! உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உங்கள் பிரிவால் துயருறும்**
**மருமக்கள்**
**ஜனகன், ஜயந்தி, முரளிதரன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயமாய் மறைந்ததென்ன எங்கள் மாமாவே!

அன்பான மாமாவே! உங்கள் அஞ்சலி மலருக்கு நாங்கள் எதை எழுதுவது என்று புரியாமல் தவிக்கின்றோம். உணர்வுகளை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடிய வில்லை. இந்தியா அங்கிள் அல்லது சவுதி அங்கிள் என்று உங்களை அழைத்து மகிழ்வோம். ஏனெனில் நீங்கள் நீண்ட காலம் சவுதியிலும் பின் இந்தியாவிலும் தங்கி விட்டீர்களே. நாங்கள் உங்களைப் பார்த்துப் பேசி, உங்கள் பாசத்தை யெல்லாம் அனுபவித்தது இந்தியாவில் தானே. நாங்கள் அங்கு வந்த போதெல்லாம் எங்களை அன்புடன் வரவேற்று எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்று மகிழ்வித் தீர்களே. உங்கள் வேலைப்பளுவின் மத்தியிலும் கிடைத்த ஓய்வு நேரங்களை எங்களுக்காகச் செலவழித்தீர்களே. உங்களைப் போலவே அன்ரியும் எங்களை சுவையான உணவு படைத்து மகிழ்விப்பார். இருவருக்கும் நாங்கள் எவ்வளவு கடமைப்பட்டுள்ளோம். நீங்கள் இங்கு வந்தபோது எங்கள் நன்றிக்கடனைத் தீர்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என மகிழ்ந்தோம். ஆனால் நான் எதனையும் எதிர்பார்த்து உதவி செய்யவில்லை என்பதை நிரூபிக்கவா எங்களை விட்டு ஓடி மறைந்தீர்கள்? எங்கள் எல்லோருக்கும் அங்கிள் என்று அழைக்க நீங்கள் ஒருவர் தானே இருந்தீர்கள். இனி எமக்கு யார் இருக்கிறார்கள்? அன்பான அங்கிள்! இன்று நீங்கள் உடலுடன் எங்கள் மத்தியில் இல்லை. ஆனால் உங்கள் அன்பும் பாசமும் என்றும் எங்கள் பதினாறு மருமக்கள் நினைவுகளிலும் நிறைந்திருக்கும். உங்கள் ஆத்மா இறை வன் பாதங்களில் சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு**
**மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Late Mr.S.Rasanayagam, General Manager, with Chairman and his family members Vijay Garments Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாத் துயரில் அருமை மைத்துனர்கள்

"தம்பி" என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட தங்களின் திடீர் மறைவு எங்கள் எல்லோரையும் அதிர்ச்சிக் கும் ஆறாத்துயருக்கும் ஆளாக்கிவிட்டது. இந்தியாவில் மிக வசதியாகவும் சிறப்பாகவும் வாழ்ந்துவந்த உங்களை தாய் நாட்டிற்கு காலன் தான் அழைத்து வந்தானோ! தாங்கள் விபத்திற்கு உட்பட்ட செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தாலும் மரணம் உங்களைத் தழுவிக்கொள்ளும் என்று நாம் சிறிதள வேனும் எதிர்பார்க்கவில்லை. தாங்கள் இந்தியாவில் இருந்து எமது பிள்ளை களான ஜெயந்தி, சிந்துஜா, அபிராமி, சாயி மீரா ஆகியோருக்கு செய்த உதவிகள் என்றுமே மறக்க முடியாதவை. நீங்கள் மட்டுமன்றி தங்கள் மனைவியும் உதவி செய்வதிலும் விருந்தோம்புவதிலும் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல. தாங்கள் யாழ்ப்பாணம் வந்தமை தங்களின் வாழ்க்கையில் பல வசதிக் குறைவுகளை ஏற்படுத் தினாலும் அவற்றையெல்லாம் சவால்களாக ஏற்று மிகக் குறுகிய காலத்தில் அமைதியான ஆறுதலாக வாழ்வை ஏற்படுத்து வதற்கு அயராது உழைத்தீர்கள். தாங்கள் இந்தியாவில் இல்லாதது எமக்குப் பாதிப்பை ஏற்படுத்தினாலும் உங்கள் வருகை எங்கள் எல்லோருக்கும் வட்டுக்கோட்டை வாழ் உற வினர்கள், அயலவர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் மகிழ்ச் சியைக் கொடுத்தது. எனினும் அந்த மகிழ்ச்சி நீடிக்காமல் போய்விட்டதால் ஆறாத்துயர் அடைகின்றோம். அன்பு மகனாக, அருமைச்சகோதரனாக, நிறைந்த கணவனாக பாசமிகு மருமகனாக, அன்பு மாமாவாக, அருமை மைத்துனராக சகல உறவுகளுக்கும் உத்தம எடுத்துக் காட்டாக வாழ்ந்தீர்கள். மனதாலும் பிறருக்குத் தீங்கு எண்ணாத தங்களின் ஆன்மா நிச்சயமாக இறைவனடி சேர்ந்திருக்கும் என நாம் நம்பு கின்றோம். தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**மைத்துனர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MUCH LOVED GENERAL MANAGER

We are deeply saddened to learn the passing of Mr.Rajanayagam, and would like to express our sincere condolences to his family. He was greatly respected by the staff and employees alike, while also being a trusted and dependable representative of the management.

All through his fourteen years of service with us, he remained as a leader that his colleagues and subordinates could look up to Mr.Rajanayagam's accomplishments. He had, in a way, been the backbone of our factory at kattupakkam, and a source of managerial stability to the unit. To begin with, Mr.Rajanayagam played a pivotal role in ensuring that our took over of the unit was worthwhile and seamless. From then on he has devoted to ensure the factory's expansion and sustainability, while constantly motivating the people around him. Even so, Mr.Rajanayagam principally stands out for being a remarkable human-being, and a 'fatherly figure' who was dearly held for his sense of integrity and ethics.

Please accept my condolences on behalf of the Vijay family at this difficult time, and pass on our feeling to the family. It is with particular fondness that I recall his telephonic wishes for this 'New Year', when he was still keen to know of the factory's well - being, and was glad to be assured that the factory continues to grow. Vijay Garments will deeply miss its much-loved General Manager, but he'll never be forgotten.

My father, Mr.Vijayagopal Reddy and my brother, Sharan, join me in praying that the almighty grant his soul eternal peace and ensure the family's well - being.

**Warm Regards.**
**Pavan Reddy D.K**
**Director VijayGarments Ltd.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதனுக்கு நண்பனும் எதிரியும் அவனே!

தனக்குத்தானே நண்பனாக இருப்பவன்,
மனிதர்கள் அனைவருக்கும் நண்பனாவான்.

- சீனிகா

தன்னலத்தை நாடாமல், உண்மையை நாடிடு.
நன்மைக்கும், அழிவின்மைக்கும், வெல்ல
இயலா வல்லமைக்கும் உயிரூட்டும் சக்தியாக
விளங்குவது உண்மைதான்.

- புத்தர்

இடிபோன்ற தெய்வீகக் குரல் "தா, தா, தா" என திரும்பத் திரும்ப முழங்குகின்றது. கட்டுப்பாட்டுடன் இரு, பெருந் தன்மையுடன் இரு, கருணையுடன் இரு என்பது அதன் பொருள். ஆதலால் இந்த முப்பரிமாணமும் கற்பிக்கப்படட்டும்: கட்டுப்படுத்து, கொடுத்துதவு, கருணை கொள்.

- உபநிடதம்

நமக்கு நாமே நண்பன், நமக்கு நாமே எதிரி என்பது எந்த அளவிற்கு உண்மை? உன்னதமான இந்திய ஆன்மீக இலக்கியமான பகவத் கீதையில், பேரறிவுக் கடவுள் நமக்கு கூறுகிறார்: "மனிதன் தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளட்டும். ஒருபோதும் அவன் தன்னைத்தானே தாழ்த்திக் கொள்ளாமல் இருக்கட்டும். ஏனென்றால் அவன் மட்டுமே அவனுடைய எதிரி. தன்னை அடக்கியாள்பவன், தனக்குத் தானே நண்பனாகிறான். தன்னை அடக்கியாளாதவன், தனக் குத்தானே வெளியில் இருக்கும் எதிரியைப் போல் செயல்படு கிறான்" ஆனால், யார்தான் தெரிந்தே தனக்குத் தானே எதிரியாக ஆவான்? உணர்வுப்பூர்வமாக நம்மை நாமே கட்டி யாண்டால், நாம் நமது எதிரியாகச் செயல்படமாட்டோம் ஆனால் அவ்வாறு கட்டியாளும் திறன் நம்முள் ஒருசிலருக்கே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெதும்பிய மனத்துடனோ, நமது இதயத்தில் தீய நோக்கத்துடனோ நாம் ஏதோ ஒன்றைச் செய்யத் தொடங்கினால் நாம் நமக்கே எதிரியாக செயல்படுகிறோம் இல்லையா? நமது நன்னடத்தை மற்றும் உடல்நிலையின் மீது இவை எத்தகைய தீய விளைவை ஏற்படுத்தும் என்பதை நாம் ஒழுக்கரீதியாக, அறிவுப்பூர்வமாக உணர்ந்திருந்தாலும், நம்மை முற்றிலுமாகத் தளர்ச்சியடையச் செய்யும் இத் தகையதொரு சுமையைத் தாங்கிச் சென்று தட்டுத் தடுமாறு கிறோம். அறிவாளியான ஒருவன் தனது மனத்தில் தீய எண்ணம் நிரம்ப அனுமதிப்பதற்கு நாம் எப்படித்தான் விளக்கம் கூறுவது? படிப்பறிவுக்கும் அதைச் செயல்படுத்து வதற்கும் உள்ள வேறுபாட்டை இங்கு நாம் காண்கிறோம். நம்மை முழுமையாக அடக்கியாளும் வரை, நமது கோணல் மாணலான சிந்தனையாலும் மனத்தின் தவறான கண்ணோட் டத்தாலும் அறியாமலேயே நாம் நம்மையே தாழ்த்திக் கொள் வோம். துடுப்புப் போட்டும் சிறிதுகூட முன்னேறிச் செல்லாத வனைப்போல நாம் இருக்கிறோம். ஏனென்றால் அவன் நங் கூரத்தை உயர்த்தவில்லை. உலகியல் சுமையால் நாம் அழுத்தப்பட்டிருக்கும்வரை நாம் முன்னேற முடியாது. தன்னைத் தானே தனது கீழ்மையான நிலையைத் தானே அடக்கியாள்பவனுக்கு அவனது ஆன்மா நண்பனாகிவிடும். தன்னை அடக்கியாளாதவனுக்கு அது எதிரியாகச் செயல் படும். கோபம், வெறுப்பு, துயரம் அல்லது தீவிர உணர்ச்சி வேகத்தால் நமது சம நிலையிலிருந்து தூக்கியெறியப்படும் போது நமக்கு நாமே எதிரி ஆகிறோம். அந்தச் சமயத்தில் நமக்கு அன்னியமான ஒன்றால் நாம் ஆட்டிப்படைக்கப்படு கிறோம். கோபம் என்பது அத்தகைய தொரு ஆட்டிப்படைக் கப்பட்ட நிலை. அது வாழ்க்கையில் மிகவும் அருவருப்பான தாகும். அது ஒருவனை உருக்குலைக்கிறது. இனிமையும் அன்பும் நிறைந்த ஒருவனிடம் கோபம் அல்லது பொறாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால் ஏற்படும் மாற்றம் எப்படிப்பட்டது என்றால், நாம் முயற்சி செய்தாலும் அவன் முகத்தில் முன்பிருந்த அழகின் அறி குறியைக்கூட கண்டுபிடிக்க இயலாது அந்த முகம் அவலட் சணமாகிறது. இருந்தாலும், நாம் முழுமையாக ஆட்டுவிக்கப் படவில்லை. நாம் இரு வேறு நபர்களைப் போல இருக் கிறோம் கோபப்படுபவன், கோபமற்றவன். இந்த இரட்டை நிலை நம்முள் உள்ளது. மிகவும் உயர்ந்த, சிறந்த, தூய்மை யான, நேர்த்தியானதை அடைய நம்முடைய ஒரு பகுதி விரும்புகிறது, மற்றொன்று பூமியில் கட்டுண்டு, பொருளாசை யால் நசுக்கப்படுகிறது.

கீதையின் மற்றொரு மேற்கோளில் உள்ளது. "காமம், கோபம், பேராசை இம் மூன்றும் ஆன்மாவை அழிக்கும் நரகத் தின் வாயிற்கதவுகளாகும். ஆதலால் இவை மூன்றையும் ஒருவன் விட்டொழிக்க வேண்டும்." ஆராய்ந்து பார்த்தால், இவைகளுக்கிடையே வேற்றுமை ஏதும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. பேராசைக்காரன், தன்னுடைய உயிர் முழு வதும் இச்சை ததும்ப, தன் ஆசைக்குரிய பொருள் ஏதோ ஒன்றிற்காக ஏங்கித் தவிக்கிறான். அவன் வழிமறிக்கப்பட் டால், ஆத்திரமடைகிறான். கோபம், மதிமயக்கத்தைத் தரு கிறது. இதற்கும் இதுபோன்ற அனைத்திற்கும் அஞ்ஞானமே மூலகாரணம். திடீர் கோப ஆவேசத்தால் நம்முடைய மென்மையான பகுதி ஒன்றை நாம் சின்னாபின்னமாக்கு கிறோம். ஒருநொடிப் பொழுதில் சீரழிந்த ஒன்றைச் சீரமைப் பதற்கு நெடுங்காலமாகும். நாமே நமக்கு நண்பனும் எதிரி யும் என இந்தக் காரணத்திற்காகத்தான் நமக்கு திட்டவட்ட மாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும், நாம் பிறர்மீது குற்றம் சாட்டுகிறோம். தனது துரதிர்ஷ்டத்திற்கும் தோல்விக் கும் பிறரைத் தூற்றாதவனைக் காண்பது அரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தேடும் காரணம் நம்முள்ளே இருக்கிறது என்பதை நம் அறிவுக்கண் நமக்குப் புலப்படுத்துகிறது. நம்மை அதற்கு ஏற்றவாறு திருத்திக் கொள்ளுதலும் வசப்படுத்துதலும் நமது நலத்திற்கு இன்றியமையாதது. தன் மீது கட்டுப்பாடு கொண்ட ஒருவன், இருமை நிலைகளுக்கு இடையிலும் - வெப்பம் - குளிர்ச்சி, இன்பம் - துன்பம், இரைச்சல் - அமைதி ஆகிய சூழ்நிலைகளிலும் - அமைதி காப்பவன் ஆவான். அவன் எங்கு சென்றாலும் எல்லாவித சூழ்நிலைகளிலும் பரம்பொருளின் நிலைமாறாத அனுபவத்தைத் தன்னுடன் தாங்கிச் செல்வான்.

நமக்காக அனைத்தும் எளிதாக்கி வைக்கப்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. அது யாருக் காவது உண்மையில் நன்மை விளைவிக்குமா என்பதில் என் மனத்தில் பெரிய சந்தேகம் உள்ளது. தனி மனித ஒழுக்கம் நமக்கு வேண்டும். ஏட்டறிவும் உண்மை அனுபவமும் முற்றிலும் வேறுபாடான இரு விஷயங்கள். எதை நாம் கேட்டறிந்தோமோ, எதை நாம் சில சமயங்களில் நம்முடை யது என உள்ளுணர்வுடன் அறிகிறோமோ, அதை நமது சொந்த அனுபவத்தால் மட்டுமே நமக்குரியதாக ஆக்க இயலும். அறிவைக் கடன் வாங்க முடியாது. உண்மை என்பது நாம் புரிந்துகொள்ள வேண்டிய, கிரகித்துகொள்ள வேண்டிய ஒன்றாகும். நம் மனம் எங்கு உழல்கிறதோ அதற் கேற்ப நமது அறிவு, வலிமை, வெற்றி ஆகியவை அமையும் என்பது தத்துவ ரீதியாக நமக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால், நமது மனத்தை எப்படி கையாள்வது, எப்படி கட்டுப் படுத்துவது, எப்படி நம்வசமாக்குவது என்பதையும் நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். நமக்கு உயர் ஆன்மா ஒன்று உள்ளது, அதுவே நமக்கு உண்மை நண்பன் என்பதை நாம் அறிந்திருக்கலாம். ஆனால், இந்தக் கருத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொளியின் அடிப்படையில் இதன் பொருளையும் செயல் முறையும் நாம் உண்மையாகப் புரிந்துகொள்ளும் போது நமது வாழ்க்கையின் முழுப் பரிமாணமும் மாறி அமைகிறது. நாம் மேன்மேலும் வளர்கிறோம், வலிமையுறுகிறோம், துன்பத்தைத் தாங்கி நிற்கிறோம். சகிப்புத்தன்மை வாழ்க்கையின் மகோன்னதமான செல்வங்களில் ஒன்று. பொறுத்துக் கொள்ள அறியாதவர்கள் யாரோ, அவர்கள் நெருக்கடியான சூழ்நிலையில் நொடிந்து விழுவார்கள். வாழும் கலையையும் வாழ்வதையும் அவர்கள் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை.

உணர்ச்சிவப்படும்போதும், கோபப்படும் போதும் நமது வலிமையைக் காட்டுவதாக நாம் சிலநேரங்களில் எண்ணுகிறோம். இதுபோன்ற கீழான உணர்ச்சிகளுக்கு உட்படுபவன் பலவீனமானவன்தான். வலிமையானவனை விட பலவீனமானவனே பிழை ஒன்றைப் பொறுத்துக் கொள்ளாதவன். விளையாட்டு வீரர்களிடையே இதனைப் பார்க்கலாம். நிலை தாழ்ந்தவனின் அவமதிப்புகளைப் பெரிதாக பொறுத்துக்கொள்வது மிகவும் வலிமையான விளையாட்டு வீரன் தான். பதற்றம் மிகுந்த ஒழுங்கீனமானவன் இயல்பாகவே குன்றிய சகிப்புத்தன்மை கொண்டவன். மனம் - உடல் பரிணாமத்தை ஆன்மீகத்திலிருந்து நாம் துண்டித்துவிட முடியாது. உடல் மற்றும் மனத்தில் நாம் வெளிப்படுத்துவது, நாம் ஆன்மீக உணர்வில் எவ்வாறு இருக்கிறோமா அதன் விளைவுகளே. அவை முற்றிலும் பிரிக்க இயலாதவை. நமது உயிரின் ஊற்றுக் கண்ணுடன் உணர்வுப்பூர்வமாக நாம் இணைவதே ஆன்ம அனுபவம். இந்தத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவுடன், எதுவும் தவறுவதற்கு வாய்ப்பில்லை. அதை அடையவில்லை என்றால், நாம் எவ்வளவுதான் முட்டி மோதினாலும் எல்லாம் தவறாகவே முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது சொந்த அனுபவத்திலிருந்து பிறக்கும் இறையனுபவம் நம்மிடமிருந்து இணைபிரியாதது ஆகும். ஓர் அவசர நிலையில், துயரமான தருணங்களில், தெளிவானவனாக, அமைதியானவனாக, அறிவார்ந்தவனாக இருப்பவனே உறுதியாக இருப்பான். அதேசமயம், நூல்கள் தரக்கூடிய அனைத்து அறிவையும் பெற்ற மற்றொருவன் கட்டுப்பாட்டை இழக்கிறான் அல்லது அவனுடைய சமநிலை பிறழ்கிறது. அவன் ஏன் அதைப் பறிகொடுத்தான்? அதை அவன் ஒரு போதும் பெற்றிருக்கவில்லை. நம் இயல்பிலேயே ஊறியது எதுவோ, அது நாம் இழக்க இயலாதது. நமது ஒளியை நாம் எப்பொழுதும் ஏந்திச் செல்கிறோம், எப்பொழுதும்! சுதந்திர நிலையில் உள்ளது போலவே அடிமைக் கோலத்திலும் அறிவார்ந்தவன் ஆனந்த மானவனே என ப்ளாட்டோ அறிவுறுத்துகிறார். வாழ்க்கை வரப்பிரசாதங்களை முழுமையாக அனுபவிக்க வேண்டுமானால் தன்னை வெற்றி கொள்ளுதல் என்பது உயிர் நாடியாகும். தற்போது நமது வரப்பிரசாதங்கள் நம் குறைபாடுகளால் அவ்வப்போது சூறையாடப்படுகின்றன. பெரும்பாலானவர்கள் தம்முடைய முதல் தோல்வியிலேயே அல்லது சில தடைகளைச் சந்தித்தபின் அத்துடன் நிறுத்திக் கொண்டு கூறுகின்றனர்: "நான் பிறப்பிலேயே தகுதியற்றவன், இதைச் செய்வதற்குரிய இயல்பு என்னிடம் இல்லை." அவன் தன்னுடைய அக இயல்பை ஆராயக்கூட இல்லை, மேலோட்டமாகத்தான் அவன் இத்தகைய முடிவெடுத்துள்ளான். அவன் சற்றே தன்னுள் சென்றால், தேவைக்கும் அதிகமாகவே உள்ளார்ந்த சக்திகளும் திறன்களும் அவனிடம் நிறைந்திருப்பதைக் காண்பான். நாம் நமது இரட்டை இயல்பை நினைவு படுத்திக் கொள்வோம்: தயக்கம், தோல்வி, பலவீனம் மற்றும் தடுமாற்றம் மலிந்த ஒரு பக்கம், கம்பீரம், ஆற்றல் மற்றும் அழிக்க இயலாத வலிமை மிகுந்த மறுபக்கம். உயர் ஆன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவைச் சிந்திக்கும்போதும், அதை அடைவதற்கு முற்படும் போதும், இந்தக் கீழான இயல்பு தேய்ந்து மறையும்.

முறையான மனப்பாங்குடனும், நம்மீது கட்டுப்பாட்டு டனும் இருக்கும்போது நாம் நமது நலத்திற்காக உழைப் போம். ஆனால் நமது மனம் உருச்சிதைந்து இருக்கும்போதோ, தெளிவற்றதாய் இருக்கும்போதோ, அது நமக்கு எதிரி யாகிறது. ஒவ்வொரு முறையும் தாழ்வு மனப்பான்மையில் நாம் மூழ்கும்போது, நாம் நமது உயர் ஆன்மாவிற்கு எதிராகச் செல்கிறோம். தாழ்வு மனப்பான்மை என்றால் உயர் ஆன்மாவில் நமக்கு நம்பிக்கை இல்லை என்பதே பொருள். நம்மை நாமே தாழ்த்திக் கொள்வதற்கு அதுதான் காரணம். அதேபோல், நாம் வீண் தற்பெருமையால் பூரிப்படைந்திருக் கும் போது அல்லது ஆணவம் தலைக்கேறும் போதெல்லாம் நமது தெய்வீக இயல்பிலிருந்து விலகிச் செல்கிறோம். இரு வழிகளில் அகந்தை வேலை செய்கிறது. இழிந்த, துயரம் பொருந்திய வாழ்க்கையில் இருப்பது போலவே ஆடம்பர மான, செருக்கான வாழ்க்கையிலும் அது உள்ளது. நாம் செல்வமும் செல்வாக்கும் படைத்தவர்களாக இருப்பதால் நம்மை நாமே புகழ்ந்து கொள்ளாமலும், அல்லது நாம் துயரம் கொண்டவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பதால் நம்மை நாமே தாழ்த்திக்கொள்ளாமலும், நேர் எதிர் எல்லைக் கோடுகள் தாண்டிடாமல் உள்ள சமநிலை மனம்தான் நமக்கு எல்லாவற்றையும் விட மேலான தேவையாகும். வேத வாக்கு களைப்போல வேறு எந்தப் போதனையும் இந்த நடுத்தரமான பாதையைப் பெரும் தாக்கத்துடனும் செயல்முறை அறிவுடனும் வழங்கியதில்லை. மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக, ஆன்மீகப் பேருணர்வின் உச்சங்களில் மட்டுமல்லா மல், நம் அன்றாட வாழ்க்கையிலும் இத்தகைய சமநிலை நமக்குத் தேவை என இதைக் கீதையும் எப்பொழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு நினைவுபடுத்துகின்றது. அற்ப விஷயங்களில்கூட சிலர் அதிக உணர்ச்சிவசப்படுபவர்கள். சற்று கூடுதலான வெப்பத்திற்கோ குளிருக்கோகூட அவர்கள் தங்களின் வேதனை களைப் பெரிதுபடுத்துவார்கள். ஆனால் இவையெல்லாம் அவர்களின் மனக் கண்ணோட்டத்தில் தான் உள்ளது. துன்பமயமான சூழ்நிலை என எதை நாம் அழைக் கிறோமோ அதுகூட பெரும்பாலும் நமது சொந்த வாழ்க்கை யால் மிகைப்படுத்தப்பட்டதே!

நம்மை நாமே சற்று அலசிப் பார்ப்போம். தைரியமும் தெய்வ அர்ப்பணமும் பயமின்மையும் கூடிய உயர்வான மனப்பாங்குடன் ஒருநாளை நாம் தொடங்கினால், இன்னொரு நாளை மனத்தளர்ச்சியுடனும் சந்தேகத்துடனும் அல்லது அதிருப்தியுடனும் ஆரம்பிக்கிறோம். நமது வாழ்க்கையின் மீதான இதனுடைய எதிர்விளைவுகளைக் கவனித்தால், நாமே நமது நண்பன், நாமே நமது எதிரி என ஏன் அறுதி யிட்டு கூறப்படுகிறது என்பதை வெகு விரைவாக உணர்ந்து கொள்வோம். மனத் தளர்ச்சியால் நாம் நம்மை மட்டு மல்லாமல் பிறரையும் தாழ்த்திவிடுகிறோம். மனச் சோர்வுடன் உள்ளவன் மற்றொருவனின் வாழ்வைத் தீண்டு வதற்கு உரிமை இல்லை என ஒரு மாபெரும் குருவானவர் கூறுவது வழக்கம். வாழ்க்கை வருந்துவதற்காக ஏற்பட்டதல்ல. நம் சுமையை மற்றொருவனின் மீது ஏற்றிவிடக் கூடாது. தன்னல நாட்டத்துடனும் நாம் இருக்கக்கூடாது. சிலர் துன்பத்தில் ஆழ்ந்திருக்கின்றனர், அதை அவர்கள் நேசிப்பதாகத் தோன்றுகிறது! நீங்கள் அவர்களை அதைவிட்டு வெளியே கொண்டுவந்தால், மறுபடியும் அவர்கள் அதிலேயே அமிழ்ந்து விடுகின்றனர். அந்த வட்டத்திலேயே தங்கும் பழக்கத்தை அவர்கள் உருவாக்கிக் கொண்டுள்ளனர். அவர்கள் மட்டுமே அதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள இயலும். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தங்களைத் தாங்களே உள்ளிருந்து எழுப்பிக்கொள்ளும் வரை, அனைத்து மதங்களும் அனைத்து உயர் லட்சியங்களும் அவர்களுக்கு வெளியிலிருந்து உதவுதல் இயலாது. இந்தக் காரணத்தினால்தான் கீதை ஆணித்தரமாகக் கூறுகிறது: "உன்னை நீயே உயர்த்திக்கொள். ஒருபோதும் உன்னைத் தாழ்த்திக்கொள்ளாதே."

ஓரளவிற்காவது தன்னைத் தாழ்த்திக்காட்டாமல் போனால், தாங்கள் ஆன்மீக வாதிகளாக இருக்கமுடியாதோ என மக்கள் சில சமயங்களில் முட்டாள்தனமான கற்பனைகளைக் கொண்டுள்ளனர். ஆனால் பழங்களை வழங்கும் விதமாக சாய்ந்த மரக் கிளையுடன் உள்ள மரம்தான் ஆன்மீகத்திற்கான இன்றியமையாத அடக்கம் என்பதற்கு எடுத்துக்காட்டு. வெறுமையான மரம் விறைப்பாக நின்று எதையும் வழங்குவதில்லை. நமது வாழ்க்கை பயனளிக்கக் கூடியதாகும் போது கடுமைக்கு இம்மியும் இடமின்றி மென்மை, இனிமை, நல்ல குணநலன்கள் ஆகியவை வெளிப்படாமல் இருக்க இயலாது. பயனற்ற வாழ்க்கை எப்போதும் மற்றவர்களின் குற்றங்களைக் காணவும், வேறெங்கோ கடுமையான பின் விளைவை ஏற்படுத்தவும் செய்கின்றது. அதனால்தான் இத்தகைய உட்கோட்பாடுகளை உருவாக்கியும் அவற்றை வெளிப்படுத்தவும் வேண்டும். தீய, வெறுக்கத்தக்க எண்ணங்களைச் சிந்திக்கக்கூடிய அதே மனம், நன்மையான, ஆக்கப்பூர்வமான எண்ணங்களையும் கூட சிந்திக்கும் எல்லையற்ற ஆற்றல் உடையது. புத்தர் அவரது சீடர்களுக்குக் கொடுத்த மகோன்னதமான கருத்து களில் ஒன்று எதுவென்றால், ஒரு நண்பனோ, தந்தையோ, தாயோ அல்லது வெளியில் இருக்கின்ற எந்த நபரையும் விட, சீரான மனமே ஒரு மனிதனுக்கு மேலான நன்மையைத் தரும். பிற மனிதர்களின் அபிப்பிராயத்தின்படி வாழும் மக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையாவது எப்பொழுதாவது சாதித்ததுண்டா? நாம் நம் முழுமனத்துடனும், சுயநலமற்ற உணர்வுடனும் ஒரு நற் செயலைப் புரியும்போது, பிறர் அதை ஒத்த மனநிலையுடன் பார்க்கின்றனரா, இல்லையா என்பது தேவையற்ற ஒன்று, நமக்கு அந்த நற்செயலே ஆனந்தத்தையும் மேன்மையான உணர்வையும் நல்கும்! புகழ்ச்சியையும் அங்கீகாரத்தையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தால், தற்புகழ்ச்சி மனப் பான்மை நமக்கு இருந்தால் நாம் கெட்டு அழிவோம். புகழ்ச்சியைச் சார்ந்திருப்பவன் இகழ்ச்சியாலும் அதற்குச் சமமாக பாதிக்கப்படுவான். நமது உள்முக வாழ்க்கை வெறுமையாக இருக்கும்போது, புறமுகத்தைச் சார்ந்திருப் பதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் நமது உள்முக வாழ்க்கை நிறைவாக இருந்தால், சிறிதுசிறிதாக புறச் சூழ் நிலைகளில் கவனம் செலுத்துவது குறையும். இதனால் நாம் மேலும் மகிழ்ச்சியாக இருந்து, மேன்மேலும் ஒரு மகிழ்ச்சி கரமான சூழ்நிலையை, ஒரு வலிமையான சூழ் நிலையை உருவாக்குவோம்!

நாம் விரும்புவதெல்லாம் நம்மிடம் இல்லை யென்றால், நம்மிடம் இருப்பதை உன்னதமாக உபயோகிப் போம். ஆக்கத்திறனுள்ள மேதைமையை தங்களுள் கொண்டு, குறைவான பொருள்களால் நிறைவானதைப் படைப்பவர்களே மிகச் சிறந்த கலைஞர்கள், கலைஞனைப் படைப்பது பொருள் அல்ல, அந்தப் பொருளிற்கு உருக் கொடுப்பவன் கலைஞனே! இதை மனத்தில் பதியவைத் துக்கொண்டால், புகார் செய்வதும், நம்மிடமோ பிறரிடமோ நாம் குறை கண்டுபிடிப்பதும் மறைந்துவிடும்.

**சுவாமி பரமானந்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிதாகும்"

- திருக்குறள்

# நன்றி நவிலல்



*19.01.2016 அன்று மாலை சற்றேனும் எதிர்பாராத வகையில் எம்மை விட்டு அமரரான எமது குடும்பத்தலைவர் செகராஜசிங்கம் இராசநாயகம் விபத்திற்கு உட்பட்ட வேளை தகவல் அறிந்து விரைந்து செயற்பட்டு அன்னாரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு உதவிய அன்புள்ளங்களுக்கும், சங்கானை மற்றும் யாழ் போதனா வைத்தியசாலையில் மிகவும் கடமை உணர்வோடு அன்னாரது உயிரைக் காப்பாற்ற இறுதிவரை சேவையாற்றிய வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் அனைத்து அன்புள்ளங்களுக்கும், யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரதிப்பணிப்பாளருக்கும், வட்டுக்கோட்டை காவல் துறையினருக்கும், நாம் சந்தித்த ஈடு செய்யமுடியாத பேரிழப்பினால் கலங்கித் துவண்டவேளை விரைந்து வந்து எமது துயரில் முழுமையாகப் பங்கு கொண்டு ஆறுதல் வார்த்தைகள் கூறி, எம்மைத் தேறுதல் அடைய உதவிய அன்புடையோர்களுக்கும், தபால், தொலைபேசி ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்தோர்களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாற்றியும் இறுதிக் கிரியைகளிலும் இறுதி யாத்திரையிலும் கலந்து கொண்டோருக்கும், மேலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பித்தோருக்கும், அனைத்து நடவடிக்கைகளையும் குறிப்பறிந்து மிகத் திறமையான வழிவகைகளில் ஆற்றி உதவிய அன்பு உள்ளங்கள், உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும், இம்மலரினை குறுகியகாலத்தில் சிறப்புற அச்சிட்டு தந்துதவிய மதிகலர் அச்சகத்தினருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றி மறவா நன்றியினைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு"*

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டு வந்தாய் ? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
இதுவே உலக நியதியும் எனது
படைப்பின் சாராம்சமுமாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

COLOURS
0212229285
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org